# குளச்சல் நகராட்சி

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகக் கடிதம் ந.க. எண் அ3/48/2014, நாள் 17.01.2014 –ல் இந்நகராட்சிப் பகுதியில் பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பிரச்சினைகள் குறித்து, 26.01.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சிறப்பு மன்றக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் கீழ்காணும் ஆபத்தினை விளைவிக்கும் காரணிகளின் பட்டியலினை பெற்று அது குறித்து விவாதிக்கவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பொருள் :**

1. ஆபத்தான நிலையில் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் மற்றும் பழுதடைந்த மின் கம்பங்கள்.
2. அடையாள சின்னம் குறித்த பலகை இல்லாத மிகவும் ஆபத்தான வளைவுகள் உள்ள சாலைகள்.
3. பாதுகாப்பற்ற நிலையில் உள்ள சாலை ஓர பள்ளங்கள்.
4. கடற்கரைகளில் ஆபத்தானதாக விளங்கும் சறுக்குப் பாறைகள், ஆழமான பகுதிகள்.
5. ஆற்று நீர் சுழல்கள் மற்றும் புதை மண்கள்.
6. கிணறு, கழிவு நீர் தொட்டி மற்றும் ஓடைகள்.
7. பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய மற்றும் இடையூறாக உள்ள மரங்கள்.

மேற்கண்ட பொருள்கள் குறித்து நிறைவேற்றப்படும் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 87/2014/ச.அ)

**குளச்சல் நகராட்சி மன்றத்தின் 26.01.2014–ம் தேதிய 1–ம் எண் தீர்மானத்தின் நகல்.**

(1) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 24 வரையிலான பகுதிகளில் தாழ்வான நிலையில் காணப்படும் மின்கம்பிகளை உயர்த்தி கட்டுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மற்றும் 12 வார்டுகளுக்குட்பட்ட பழுதான நிலையில் காணப்படும் மர மின்கம்பங்களை அகற்றி காங்கிரீட் மின்கம்பங்களை அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை ஜெனரேட்டர் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ள பகுதியின் முன் தாழ்வான நிலையில் செல்லும் மின் இணைப்புகள் இல்லாத மின்கம்பிகளை அகற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சிக்குட்பட்ட 23–ம் வார்டில் உள்ள இதுநாள் வரையிலும் மின் இணைப்புகளில்லாத வெள்ளை மணல் பகுதியில் அமைந்துள்ள 10 –க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்இணைப்பு மற்றும் தெருவிளக்குகள் அமைக்க அப்பகுதிகளில்

தேவையான மின்கம்பங்கள் நட தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான அனைத்து சேதமடைந்து ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில் குண்டும் குழியுமாக உள்ள அனைத்து சாலைகளையும் பராமரித்து உடன் சரி செய்ய நெடுஞ்சாலைத் துறையை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலைகளின் அருகில் அமைந்துள்ள சாஸ்தாங்கரை அரசு தொடக்கப்பள்ளி மற்றும் ஜோசப் மெட்ரிக்குலேசன் பள்ளி, திங்கள்நகர் சாலையில் அமைந்துள்ள புனித மேரி மேல்நிலைப்பள்ளி, களிமார் பகுதியில் அமைந்துள்ள புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, மரமடி மற்றும் பீச் ஜங்சன் பகுதிகளில் வேகத்தடை அமைக்க நெடுஞ்சாலைத் துறையை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

26.01.2014 அன்று சிறப்பு கூட்டம் நடத்தப்பட்டு நகராட்சி பகுதியில் பொதுமக்களின் உயிருக்கும், உடமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும் பட்டியல் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்) அ.நசீர்,
நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 ஜனவரி திங்கள் 30.01.2014–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் சமூக, பொருளாதார, சாதிவாரி கணக்கெடுப்பிற்காக இரண்டு புதிய கணனிகள் வாங்கப்பட்டு, கணக்கெடுப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டது. தற்போது கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்து ஆறு மாதங்கள் கடந்து விட்டதால், மாவட்ட ஆட்சியர் அலுவலக அறிவுரையின்படி, கணக்கெடுப்பு Data–வின் Hard Disk –ஐ பாதுகாப்பாக வைத்து விட்டு, கணனிகளை பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வந்து அலுவலக அவசியத்திற்கு பயன்படுத்துவதற்கு கணனிகளுக்கு தேவையான Hard Disk – வாங்குவதற்கு நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | Tropic Computers,<br>Court Road, Nagercoil. | ரூ. 3,800/– |
| 2. | Act Automation,<br>M.S.Road, Vadasery. | ரூ. 3,750/– |
| 3. | ACC Systems,<br>WCC Road, Nagercoil | ரூ. 3,850/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் Act Automation, Vadasery நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மானம் எண்.814 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் On line மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சி பகுதிகளை கண்காணிப்பதற்காக CCT Camera பொருத்தப்பட்டுள்ளதாலும், நகராட்சியில் தற்போது பயன்பாட்டிலுள்ள Broad band connection –ன் வேகம் குறைந்துள்ளது. எனவே தற்போது பயன்பாட்டில் உள்ள BBG 700 திட்டத்தை BBG Combo ULD 1425 –க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டத்திற்கான புதிய D link வாஙகுவதற்காக நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | S.A.M.Technology,<br>Vettoornimadam, Nagercoil. | ரூ. 2,800/– |
| 2. | B.K.M.Computers,'<br>Cape Road, Nagercoil. | ரூ. 3,050/– |
| 3. | Rayz Computer,<br>Chettikulam, Nagercoil | ரூ. 2,950/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.A.M.Technology, Nagercoil நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவானது. எனவே பணியின் அவசரம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள S.A.M.Technology, Nagercoil நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும், மேற்படி பணிக்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1350/2010)

**தீர்மானம் எண்.815 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக நகர்மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) ஆகியோர் நேராய்வு மேற்கொண்ட போது கண்டறியப்பட்ட குறைபாடுகளை சரி செய்யும் பொருட்டு கீழ்காணும் பணிகள் நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | இ2/2191/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, இக்பால் தெருவில் குடிநீர் வினியோக குழாயில் ஏற்பட்ட கசிவை சரி செய்தல். | 48,000/– |
| 2 | இ2/1709/2013 | இந்நகராட்சி குடிநீரேற்று நிலையங்களில் பழுதடைந்த Power Capacitors சரி செய்தல். | 25,000/– |
| 3 | இ2/1710/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை ஆழ்துளை கிணறு எண்.9–ல் பழுதடைந்த மோட்டாரை பொருத்துதல். | 65,000/– |
| 4 | இ2/1711/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு குடிநீர் குழாய் அடைப்பு, ஆழ்துளை கிணறு எண்.5–ன் அருகில் மார்கெட் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான குழாய் மற்றும் மரமடி சந்திப்பிலிருந்து துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான குழாய் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல். | 12,000/– |
| 5 | இ2/1712/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு, மெர்க்கண்டைல் வங்கி முன்புறம், ஆசாத்நகர் (பெரியபள்ளி அருகில்) காமராஜ்சாலை மற்றும் அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றின் சுவிஸ் வால்வுகள் சரி செய்தல். | 62,000/– |
| 6 | இ2/1713/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு எண்.4 மற்றும் 5–ன் கேபிள் சரி செய்தல். | 20,000/– |
| 7 | இ2/1714/2013 | இந்நகராட்சிக்குட்பட்ட CMC காலனி, ஆழ்துளை கிணறு எண்.6 மற்றும் KSSS காலனி ஆகிய இடங்களில் குடிநீர் வினியோக குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்தல். | 18,000/– |

**அ.குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2191/2013)

**தீர்மானம் எண்.816 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி ஆழ்துளை கிணறு எண்.23–ல் மின்மோட்டார் மற்றும் பேனல் போர்டு பழுதடைந்து விட்டதாலும், ஆழ்துளை கிணறு எண்.3–ல் பேனல் போர்டு பழுதடைந்து விட்டதாலும், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்ற இயலாமல் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே அலுவலக இருப்பில் உள்ள மோட்டாரை பொருத்துவதற்கும், பழுதடைந்த பேனல் போர்டுகளை மாற்றுவதற்கு புதிதாக இரண்டு பேனல் போர்டுகள் வாங்குவதற்கும் ரூ.36,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு, பட்டியல் தொகை வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** :_மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/93/2014)

**தீர்மானம் எண்.817 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியல் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொடர்பான விபரஙகளை Online–ல் ஏற்றம் செய்யும் பணியானது Jacob & Jacob மார்த்தாண்டம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிக்கான தொகை ரூ.**6,000**/– ஐ வழஙகக் கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7714/2008)

**தீர்மானம் எண்.818 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான **2** மேஜைகள், **3** நாற்காலிகள் மற்றும் **6** ஸ்டீல் பீரோக்கள் ஆகியவற்றை The Kanyakumari District Small Scale Engineering Service Industrial Co-op.Society Ltd., Nagercoil நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ.**1,11,800**/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1871/2010)

**தீர்மானம் எண்.819 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திரு.ஜெயசீலன் மற்றும் தனபால் ஆகிய இருவரும் சிமெண்ட் கடை வைத்திருப்பதாகவும், அதனால் தனது வீட்டில் சுகாதாரக் கேடு விளைவிப்பதாகவும் சிமெண்ட் விற்பனையை தடை செய்ய கேட்டும், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.18141/2013–படி, திரு.ஜெயக்குமார் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கான நகராட்சி சார்பில் எதிர் வாதுரை தாக்கல் செய்த வகையில் வழக்கு செலவினம் ரூ.7,500/– திரு.முருகன், வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/ /2013)

**தீர்மானம் எண்.820 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் உள்ள கதவு எண்.13/93—ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்குமாறு கோரியுள்ளார். மேற்கண்ட கதவு எண்ணின் மீது வரி நிலுவை ஏதும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோள் ஏற்று மேற்கண்ட கதவு எண்ணின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம். .(ந.க.எண். இ2/45/2014)

**தீர்மானம் எண்.821 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை பகுதியில் மின்கம்பம் எண். F/II-72 மாற்றியமைப்பதற்கு மதிப்பீடு ரூ.24,810/— தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/ /2014)

**தீர்மானம் எண்.822 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு 33 சதவிகித குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.767 நாள் 26.11.2013—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 27.12.2013—ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Jayapaba Traders, Thazhakudy. | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.Shanmuga Chemicals, Vadaseri, Nagercoil. | மதிப்பீட்டை விட 6.89% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Jayapaba Traders, Thazhakudy, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :_மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1110/2008)

**தீர்மானம் எண்.823 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திருமதி.விஜிலா மற்றும் 11 துப்புரவு பணியாளர்கள் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No. 16855 முதல் 16866 வரை வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கிற்கு நகராட்சி தரப்பில் எதிர் வாதுரை தாக்கல் செய்ய 11 நபருக்கு நபர் 1—க்கு ரூ. 7,500/— வீதம் ரூ.82,500/— கேட்டு, திரு.முருகன், வழக்கறிஞர் கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/3458/2013)

**தீர்மானம் எண்.824 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, 3 மற்றும் 4 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தப்பட்டு ஒப்பந்த காலம் 31.12.2013 உடன் முடிவடைந்துள்ளது. அத்தியாவசிய பணியான பொது சுகாதாரப் பணியில் அவசரம் அவசியம் கருதி ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்தில் அதே ஒப்பந்தகாரர் மூலம் மேற்படி பணியினை 01.01.2014 முதல் 31.03.2014 முடிய கால நீட்டிப்பு செய்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.1,55,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** பொது சுகாதார பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு கால நீட்டிப்பு செய்தும், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணிகள் செய்வதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/2622/2009)

**தீர்மானம் எண்.825 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சியில் தொழில் வரி திருத்தியமைக்கப்பட்டு 30.09.2013 வுடன் ஐந்து ஆண்டுகள் முடிவடைகிறது. 1920–ம் ஆண்டின் திருத்தப்பட்ட மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 124 (டி) இன் உட்பிரிவு 13 மேற்படி சட்டம் (2)–ன்படி அரசு விதித்துள்ள தொழில்வரி திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 1999 பிரிவு 16 மற்றும் 17–ன்படி தொழில்வரி விகிதங்களுக்கு பிரதி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரியினை திருத்தியமைக்க வேண்டும். அதன்படி குறைந்தபட்சம் 25% கூடுதல் பட்சம் 35 சதவீதம் கணக்கிட்டு நிர்ணயம் செய்யலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.38714/2008/ஆர்1 நாள் 13.08.2008–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 25 சதவீதம் அதிகரித்து நிர்ணயித்த கட்டண அமைப்பு (Slab) அடிப்படையில் ஏற்கனவே விதித்த வரிவிகிதங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட வரிவிகிதமும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண். | அரையாண்டு வருமான தற்போதைய வரி வரம்பு | தற்போதைய வரி | 01.10.2013 முதல் திருத்தியமைக்கப் பட்ட 25% கட்டணம் | 01.10.2013 –ல் திருத்தியமைக்கப் பட்ட 35% கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | 21,001 முதல் 30000 வரை | 94 | 118 | 127 |
| 3 | 30001 முதல் 45000 வரை | 235 | 294 | 317 |
| 4 | 45001 முதல் 60000 வரை | 469 | 586 | 633 |
| 5 | 60001 முதல் 75000 வரை | 704 | 880 | 950 |
| 6 | 75001 முதல் அதற்கு மேல் | 938 | 1173 | 1266 |

<u>அ.குறிப்பு</u> : அரசு ஆணையில் குறைந்தபட்சம் 25 சதவீதத்திற்கு குறையாமல் உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ1/5423/2010)

**தீர்மானம் எண்.826 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு அரசு ஆணையில் திருத்தியமைக்கப்பட்ட வரிவிகிதத்தை குறைந்தபட்சம் 25% உயர்த்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் துறைமுகத்தெரு–1, பொழிமுகம் அருகில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து மாற்றிவிட்டு, திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடுத்தல் 2013–14 மாநில நிதிக்குழு பரிந்துரைகள் 2013–14 உட்கட்டமைப்பு இடைநிரப்புதல் நிதியின்கீழ் ரூ.10,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் Universal design toilet கட்டுவதற்காக இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.694 நாள் 29.08.2013–ன்படி ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 09.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Urbane Industries Ltd.,<br>No.48, SIDCO Industrial Estate,<br>Ambathur, Chennai – 600 098. | 2.50 % மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2. | M/s.Coretech Glass Composites Pvt. Ltd.<br>No.9, SIDCO Industrial Estate,<br>Chennai – 600 098. | 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Coretech Glass Composites Pvt. Ltd, Chennai நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2669/2013)

**தீர்மானம் எண்.827 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் காணிக்கை மாதா ஐஸ் பிளாண்ட் எதிர்புறம் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து மாற்றிவிட்டு, திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல் 2013–14, மாநில நிதிக்குழு பரிந்துரைகள் 2013–14 உட்கட்டமைப்பு இடைநிரப்புதல் நிதியின்கீழ் ரூ.10,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் Universal design toilet கட்டும் பணியினை மேற்கொள்வதற்காக இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.694 நாள் 29.08.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 09.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Urbane Industries Ltd.,<br>No.48, SIDCO Industrial Estate,<br>Ambathur, Chennai – 600 098. | 2.50 % மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2. | M/s.Coretech Glass Composites Pvt. Ltd.<br>No.9, SIDCO Industrial Estate,<br>Chennai – 600 098. | 0.01 % மதிப்பீட்டைவிட குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Coretech Glass Composites Pvt. Ltd, Chennai நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2669/2013)

**தீர்மானம் எண்.828 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, 9, 10, 15 வழியாக செல்லும் ஏ.வி.எம்.கால்வாய் பகுதிகளில் அடைப்புகள் (Silt) அதிகமாக இருப்பதால் மழை காலங்களில் வெள்ளம் கால்வாய்

நிறைந்து அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மரமடி முதல் துறைமுகத்தெரு–**1** பொழிமுகம் வரை ஜேசிபி இயந்திரம் மூலம் அடைப்புகளை அகற்றவும், வார்டு எண்.**14**–ல் பாம்பூரி வாய்க்கால் அருகில் முட்புதர்கள் நிறைந்து உள்ளதால், குடியிருப்.களில் பாம்புகள் மற்றும் விஷப்பூச்சிகள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக புகார் வரப்பெற்றதால், மேற்படி பகுதியில் முட்புதர்களை அப்புறப்படுத்தவும் ரூ.**68,000/**– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று **08.01.2014** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்தத்தாரர், கருங்கல் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.S.டேவிட்ராஜ்<br>ஒப்பந்ததாரர், மண்டைக்காடு. | மதிப்பீட்டைவிட 0.28% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மதிப்பீட்டு தொகை ரூ.68,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணிஉத்தரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/4080/2013)

**தீர்மானம் எண்.829 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப் பகுதியில் மீன்விற்பனை கூடத்திலிருந்து வரும் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேட்டை விளைவித்து வருவதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பகுதியில் கழிவுநீர் குழாய் அமைத்து அருகில் உள்ள வடிகால் ஓடையில் இணைப்பதற்கு ரூ.**67,000/**– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று **09.01.2014** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர், திக்கணங்கோடு. | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |
| 2. | திரு.S.டேவிட்ராஜ்<br>ஒப்பந்ததாரர், மண்டைக்காடு. | மதிப்பீட்டைவிட 1.86% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மதிப்பீட்டு தொகை ரூ.67,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/4/2013)

**தீர்மானம் எண்.830 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

குளச்சல் நகராட்சி அலுவலக நுழைவாயிலில் '**குளச்சல் நகராட்சி அலுவலகம்**' என்ற வாசகம் பதித்த Arch type நியான் LED Board அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.755, நாள் 30.10.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 22.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.New Moon Neon (P) Ltd., Chunkankadai, Nagercoil. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.New Star Flex Printing, Vadasery, Nagercoil. | மதிப்பீட்டைவிட 11.91% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.New Moon Neon (P) Ltd.,Chunkankadai, நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** :_மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3561/2013)

**தீர்மானம் எண்.831 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு ஆர்.சி. சர்ச் முதல் ஜோசப் பெனடிக்ட் காலனி வரை ஏ.வி.எம்.கால்வாய் கரையோரம் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.9,40,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.809, நாள் 30.12.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர், கருங்கல் | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர், சேனம்விளை. | மதிப்பீட்டைவிட 0.97% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** :_மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4135/2013)

**தீர்மானம் எண்.832 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் பொட்டல்விளை குறுக்கு தெருவில் இரண்டடுக்கு ஜல்லி அமைத்து சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.808, நாள் 30.12.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்தத்தாரர், கருங்கல் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர், சேனம்விளை. | மதிப்பீட்டைவிட 1.24% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :_மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4119/2013)

**தீர்மானம் எண்.833 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல்–திஙகள்நகர் பிரதான சாலையின் தெற்கு பக்கம் அண்ணசிலை முதல் திக்கணஙகோடு திருப்பு வரையிலும், திக்கணஙகோடு திருப்பு முதல் பள்ளிரோடு வரையிலும் நடைபாதையில் டைல்ஸ் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக ரூ.**2,25,000/–**க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று **24.01.2014** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்தத்தாரர், கருங்கல் | மதிப்பீட்டைவிட 0.12% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர், சேனம்விளை. | மதிப்பீட்டைவிட 1.06% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :_1)_மதிப்பீட்டு தொகை ரூ.2,25,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/65–1/2014)

**தீர்மானம் எண்.834 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2014 ஜனவரி திங்கள் 30.01.2014–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சி 'புராதன நகரம்' என அரசால் அறிவிக்கப்பட்ட நகராட்சியாகும். இந்நகராட்சி கடற்கரை பகுதியில் தமிழக அரசால் துறைமுகம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நகரின் துறைமுகப் பகுதிகள், தியானமடம், சுனாமி நினைவு சின்னம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர் வெற்றிச்சின்னம் ஆகியவற்றை கண்டுகளிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை புரிந்து வருகின்றனர். எனவே சுற்றுலா பயணிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும், மேற்படி போர் வெற்றிச் சின்னத்தை பெருமைப்படுத்தும் நோக்கிலும், சுற்றுலா பயணிகளை கவரும் விதத்திலும், போர் வெற்றிச்சின்னம் அருகில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முகக் கடிதம் ந.க.எண்.வி2/20710/2013 நாள் 07.01.2014–ன் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி அறிவுரைப்படி, மேற்படி பணியினை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்யவும், பின்னர் திட்ட நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1) பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்தை தற்போது இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பின்னர் திட்ட நிதியில் ஈடு செய்து கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/121–1/2014)

**தீர்மானம் எண்.835 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.15/59–ன் குடிநீர் இணைப்பானது மனுதாரரின் வேண்டுக்கோளுக்கிணங்க 07.06.2007–ல் தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மனுதாரர் குடிநீர் குழாய் இணைப்பு மீண்டும் வழங்க கோரியுள்ளதால் குடிநீர் அத்தியாவசியம் கருதி 27.01.2014 அன்று நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். இ2/4061/2013)

**தீர்மானம் எண்.836 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கவிஞர் கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.28 கடையின் உரிமதாரர் திரு.ஆர்.ஜே.சங்கர் தனக்கு கடை நடத்த முடியாததால் கடையை நகராட்சியில்10/2013–ல் ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி கடைக்கான வாடகை நிலுவைத் தொகையினை வைப்புத் தொகையில் ஈடு செய்யவும் தெரிவித்துள்ளார். மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) 10/2013 மாதத்திற்கு பிறகு கேட்பினை ரத்து செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2035/2012)

**தீர்மானம் எண்.837 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 10/2013–ம் மாதத்திற்கு பிறகு எழுப்பப்பட்டுள்ள கேட்பினை ரத்து செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி